Registered as a News Paper in Sri Lanka; பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 23 உ வெள்ளிக்கிழமை (09 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 20 ஓசை 255

## அகதிகளை "இங்கிலீசில்" பேசி விரட்டிய அதிகாரி

(யாழ்ப்பாணம்)

பல வாரங்களாக உலர் உணவு நிவாரணம் பெறாத திருக்கோணமலையிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்; பொம்மை வெளிப்பகுதியில் குடியேறி இருக்கும் சில வறுமைப்பட்ட மக்கள் தமது பகுதி கிராமசேவையாளரிடம் சென்று தமது குறையை எடுத்துக் கூறிய போது அவர் உதவி அரசாங்க அதிபரிடம் அனுமதி பெற்று வருமாறு கூறி (4ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக மனித உரிமை பாதுகாப்பு குழு பாரபட்சமான நடவடிக்கை

(கொழும்பு)

அரசின் மீதுள்ள தப்பெண்ணத்தினால் மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு பாரபட்சமாக நடந்து கொண்டுள்ளது என சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் நேற்றுக்காலை கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கடந்தமாதம் சிறிலங்காவிற்கு வந்து சென்ற ஐரோப்பிய பாராளுமன்றத்துடன் தொடர்புடைய மனிதஉரிமைகள் பாதுகாப்புக் குழுவினர் வெளியிட்ட அறிக்கை தொடர்பாகவே அமைச்சர் ரஞ்சன் இவ்வாறு தெரிவித்தார்.

மனித உரிமை ஸ்தாபனங்கள் தற்பொழுது மனித உரிமைகளுக்காகப் போராடுவதில்லை. அவை குற்றவாளிகளுக்காகவே போராடுகின்றன என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துவெளியிடுகையில் மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு பக்கச்சார்பாக நடந்துகொண்டதாகவும் குற்றஞ்சாட்டினார். ஜே வி. பியினரால் நாட்டிற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் பற்றியோ, அவர்கள் மேற்கொண்ட மனிதஉரிமைகள் மீறல்கள் பற்றியோ இந்தக் குழு (4ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளை, மாவிட்டபுரம் நேற்று விமானக் குண்டு வீச்சு

(தெல்லிப்பளை)

ஹெலி நோட்டம் விட்டுச் சென்ற சிறிது நேரத்தில் அவ்விடத்திற்கு வந்த இரண்டு பொம்மர்கள் குண்டுத் தாக்குதல்களை நடாத்தின.

நேற்றுக்காலை 7 45 மணியளவில் வலிகாமம் வடக்குப் பகுதியிலுள்ள மாவிட்டபுரம், தெல்லிப்பளைப் பகுதிகளை ஹெலி ஒன்று நோட்டம் விட்டது. ஆனால் தாக்குதல்கள் எதனையுமே நடத்தாது சென்றது.

இது சென்ற சிலநிமிடங்க (4ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் இருந்து தொடர்ச்சியான ஷெல்தாக்கு

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த சில தினங்களாக சுருவில், நாரந்தனை, புளியங்கூடல் ஆகிய பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதலை நடாத்தி வருகின்றனர்; காலை, மதியம், இரவு என்று எந்தநேரமும் இடைவிடாது நடாத்தப்படும் இந்த ஷெல் தாக்குதல்களினால் இப்பகுதிகளில் உள்ள பல வீடுகள் சேதமடைந்து வருவதுடன் இப்பகுகளில் வாழும் மக்கள் அச்சம் காரணமாக பெருமளவில் இடம் பெயர்ந்து வருகின்றனர். இதேவேளை தீவுப் பகுதிக்கடலில் தரித்து நிற்கும் பாரிய கடற்படைப் பீரங்கிப் படகுகளில் இருந்து மேற்படி பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலும் நடாத்தப்படுகின்றது. (22)

## வெளிமாவட்ட மாணவருக்கான உலர் உணவு பல்கலைக்கழக தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்குத் தற்போது சமூகம் தந்திருக்கும் வசதிகுறைந்த வெளிமாவட்ட மாணவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் அரசஅதிபர் ஒப்புதலுடன் உலர் உணவு வழங்க எடுத்துள்ள தீர்மானத்தைத் தாம் ஏற்றுக்கொள்வது இயலாத காரியம் எனவும் யாழ். பல்கலைக்கழகம் இந்த உலர் உணவு வழங்கும் திட்டத்தை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் ஊடாகவே (4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினைக்கு உதவும்படி அரபுநாடுகளிடம் ரஞ்சன் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு உதவும்படி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா அரபு நாடுகளைக் கேட்டுள்ளார். லிபியாவையும் அரபுநாடுகளையும் இலங்கைக்கு உதவும்படி தாம் கேட்டுள்ளதாக அமைச்சர் நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## மாவிட்டபுரத்தில் மோதல்; இராணுவம் முகாம் திரும்பியது

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரத்தில் இருந்து முன்னேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதலில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

நேற்று முன் தினம் காலை பதினொரு மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் மாவிட்டபுரத்தில் இருந்து (4ஆம் பக்கம் பார்க்க)

## "எழுச்சி யாத்திரை"

(வடமராட்சி)

மாவீரர் நினைவாக வடமராட்சிப் பிரிவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் நடாத்தப்படும் ''எழுச்சி யாத்திரை'' கடந்த மூன்றாந் (4 ஆம் பக்கம் பார்க்க)

## "தமிழீழ மாணவர்"

விடுதலைப்புலிகள்மாணவர் இயக்கத்தின் வெளியீடான 'தமிழீழ மாணவர்' என்ற இதழ் வெளிவந்துள்ளது. இது விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் அதிகார பூர்வ ஏடாகும்.

மன்னாரில்

## கடற்படைப் படகுகள் மீது புலிகள் தாக்கு; பல படைபலி

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினரின் படகுகள் மீது விடுதலைப்புலிகள் ஆர். பி. ஜி. தாக்குதல் மேற்கொண்டதில் படகு ஒன்று பலத்த சேதமடைந்ததுடன் அதில் வந்த இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை எட்டு முப்பது மணியளவில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்மீது கடற்படை சூடு சடலங்கள் கரை ஒதுங்கின

(குறிகாட்டுவான்)

சிறிலங்கா கடற்படையினர் மீனவர்கள்மீது மேற்கொண்ட துப்பாக்கித்தாக்குதலால்பலர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களின் சடலங்கள் கரைஒதுங்கியுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை ஐந்துமணியளவில் குறிகாட்டுவான் கடற்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள்மீது சிறிலங்கா கடற் (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். போதனா வைத்தியசாலையில் மருந்துகள் கையிருப்பில் இல்லை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா முப்படைகளின் குண்டுவீச்சால் சேதமடைந்த யாழ். போதனா மருத்துவமனை இன்று மீண்டும் செயற்பட ஆரம்பிக்கின்றபோதிலும் இந்த வைத்தியசாலைக்கு தொடர்ச்சியான மின்சாரம் இன்மையும், மருந்துப் பொருள்களின் பற்றாக்குறையும் தொடர்ந்தும் பிரச்சினையாக உள்ள அதேவேளை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் இந்த வைத்தியசாலைக்கான தனது அலுவலகப்பிரிவை ஆரம்பிப்பதற்கு பெரிய அளவிலான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

சத்திரசிகிச்சை செய்து கொள்ளும் நோயாளர்களுக்குரிய ''பெதடின்'' மற்றும் விசர்நாய்கடி தடுப்புமருந்து (ஏ? ஆர். வி.) போன்றவை மிகக்குறைந்த அளவிலும், பரசிடமோல், அம்பசிலின் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தியசாலையில் ஒழுங்கு விதிகள்

(யாழ்ப்பாணம்)

இன்று இயங்க ஆரம்பித்துள்ள யாழ். போதனா மருத்துவமனையில் சில ஒழுங்கு விதிகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

வெளிநோயாளர் பிரிவு வழமைபோல் இயங்கும். வார்ட்டில் அனுமதிக்கப்படும் நோயாளிகளை பார்வை இடுவதற்கு செல்வோர் அதற்குரிய அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும். நண்ப (4 ஆம் பக்கம் பார்க்க)

## தாளையடியில் பீரங்கித்தாக்குதல்

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினரால் தாளையடிக் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் தொடர்ச் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

### மது

சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த புதன்கிழமை மாவிட்டபுரத்தில் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்றில் காயமடைந்த மது (வடிவேல் ஆனந்தன் வேம்பிராய்ச் சந்தி மீசாலை வடக்கு) என்ற போராளிநேற்றையதினம் வீரமரணம் அடைந்துள்ளார்.

போராளி மதுவிற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

## வரிவிளம்பரம்

**டில்கா வாச் வேக்ஸ்**
**DILKA WATCH WORKS**

வாடிக்கையாளரின் வசதிக் கமைய எமது ஸ் தா ப ன ம் மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையிலும் இல. 3 சித் தன்கேணி றோட், ப ண் ட த் தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடி யோக்களும் உ த் த ர வாதத் துடன் திருத்திக் கொடுக்கப் படும்: சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (B-1554)

**'முடிவல்ல ஆரம்பம்'**

மீரா வெளியீடு சிதம்பர திருச்செந்திநாதன் எ ழு தி யது. 'இங்கு சண்டை பிடிக் காட்டி எங்களை வெளிநாட் டில இருக்க விடுவான்களே' இப்படிச் சொல்லும் சுயநல மனோபாவமுடைய க ந் த சாமியை இந்நாவலில் சந்தி யுங்கள். து ர் க் கா ஸ்ரேஷ னேர்ஸ் சுன்னாகம், திருக் கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். (R/808)

**''நிலவே நீ மயங்காதே''**

மீரா வெளியீடு இந்திரா பிரியதர்ஷினி எ ழு தி ய து. தவிக்கும் பெண்மனம், தடு மாறும் பெண்மனம், செய்வ தறியாது திகைக்கும் பெண் மனங்களை இந்நாவலில் சந் தியுங்கள். துர்க்கா ஸ்ரேஷ னேர்ஸ் சுன்னாகம், திருக் கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். (R- 805)

**தேவை**

சீமெந்து, கோழித்தீன் வெற் றுப் பைக்கற்றுக்கள் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம் B-1569

**நீம்-தூபம்**

நுளம்புத் தொ ல் லை யி லிருந்து விடுபட நீம் சுகாதார தூபம். பைக்கற் ஒன் று ரூபா. 1/- மட்டுமே. திருநெல வேலியிலும் இ ணு வி லி லும் அண்ணா கோப்பிக் கடையில் கிடைக்கிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம். B-1568

**விற்பனைக்கு**

பொமனேரியன் நாய்க்குட் டிகள் (55 நாட்கள் நிரம்பி யவை.) வி ற் ப னை க்குண்டு தொடர்பு:- கிறிஸ்ரி 261/10 கொ ழு ம் பு த் து றை வீதி கொழும்புத்துறை. R-816

**அஷ்டலக்ஷ்மி பாலர் தமிழ்**

சீ ர் தி ருத்த எழுத்துக்களு டன் அஷ்டலக்ஷ்மி பாலர் தமிழ் வண்ணப்பதிப்பு (இரண் டாம பதிப்பு) விற்பனையா கின்றது. ரூபா12/- ஆர்ட்பேப் பரில் ரூபா 15/- மொத்தமாக கிடைக்கும் இடங்கள்: பூபால சிங்கம் புத்தகசாலை, மண் டேலா ரேடேஸ், நல் லூ ர். அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. (B-1570)

**பொது அறிவு-பாலர் தமிழ்**

எழுது வினைஞர்களுக்கான போட்டிப் ப ரீ ட் சை க்குரிய பொதுஅறிவு (புதிய பதிப்பு) ரூபா 46/- சீர்திருத்த எழுத் துக்களுடன் வண்ணப் பதிப் பான பாலர் தமிழ் விலை ரூபா 12/- ஆர்ட்பேப்பரில் ரூபா 15/- கிடைக்குமிடம் அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. B-1571


# புங்குடுதீவு பாடசாலைகளில் மாணவர் வரவு அதிகரித்துள்ளது

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கொ த் த ணி ப் பாடசாலைகளில் மாணவர் வரவு தற்போது குறிப்பிடத் தக்க அளவு அதிகரித்துள் ளது. கடந்த மாதம் பாட சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில வாரங்களுக்கு மாண வர்களில் ஒரு சிலரே பாட சாலைகளுக்கு வருகை தந்த னர்.

ஆனால் தற்போது பெரு மளவு மாணவர்கள் வருகை தருகின்றனர். மேற்படி பாட சாலைகளில் கற்பிக்கும் வெளி யூர் ஆசிரியர்களும் தற்போது புங்குடுதீவிலேயே தங்கி நின்று கற்பித்து வருவதனாலேயே மாணவர் வரவு இவ் வா று அதிகரித்திருக்கின்றது என்று கூறப்படுகிறது. (22)

# பயிர்ச்செய்கைக்கு பயன் படுத்தாதவர்களின் காணிகள் சுவீகரிக்கப்படும்

(வேலணை)

தீவுப் பகுதி யி ல் உ ள் ள பயிர்ச் செய்கைக்கு உகந்த காணிகளில் பயிர்ச் செய்கை யினை மே ற் கொ ள் ளா ம ல் வைத்திருக்கும் ஒவ்வொ ரு வ ரின் காணிகளும் சுவீகரிக்கப் படும் என சிற்றூரவை வட் டவை தெரிவித்துள்ளது.

காணிகள் இருக்கும் பகுதி களைச் சேர்ந்த சிற்றூரவை யினரோ அல்லது வட்டவை யினரோ அந்தக் காணிகளை எடுத்து பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள ந ட வ டி க் கை எடுப்பார்கள். (14)

# தீவுப்பகுதியைச் சூழ கடற்படைரோந்து அதிகரிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகியஇடங்களைச் சூழ உள்ள கடற் பகுதியில் தீவிரரோந்து சுற்றித்திரியும் சிறிலங்கா கடற்படையின் பாரிய பீரங்கிப் படகுகளில் இருந்து அடிக்கடி பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின் றன. கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ள மே ற் ப டி ரோந்து நடவடிக்கைகளின் போதே இவ்வாறு வேட்டுக் கள் தீர்க்கப்படுகின்றன.

மேலும்நயினாதீவு முகாமில் இருந்தும் கடற்படையினரால் ஷெல் தாக்குதல் துப்பாக்கிப் பிரயோகம் என்பனவும் விட்டு விட்டு நடாத்தப்படுகின்றன. அண்மையில்இருட்டில் பனைக் குற்றி ஒன்றைக் கண்டு பீதி யடைந்த படையினர் அதன் மீது துப்பாக்கிச் சன்னங்க ளைப் பொழிந்து தள்ளி அத னை நிலத்தில் சாய்த்து விட் டனராம். (22)

# கஷ்ட நிவாரணம் வழங்கும் வேலைகள்செயலகத்தில் துரிதம்

(யாழ்ப்பாணம்)

அவசரகால வேளையிலும் அலுவலகங்களுக்கு ச மு க ம் தந்த யாழ். கச்சேரி ஊழியர் களுக்கு பொ து நி ர் வா க அமைச்சின் 37/90ஆம் இலக்க செப்ரெம்பர் மாத சுற்றறிக் கையின் பிரகாரம்கஷ்ட நிவா ரணம் வ ழ ங் கு வ தற்கான வேலைகள் துரிதமாக நடை பெற்று வருகின்றன.

இதே போல அ னை த் து திணைக்களங்களைச் சேர்ந்த பணிப்பாளர்களும் விரைவில் தமது அலுவலர்களுக்கான க ஷ்டநிவாரணத்தைததயார் செய்ய உள்ளனர் எனவும் தெரிகிறது. (லோ)

## சுஜிக்கு மக்கள் அஞ்சலி

(அரியாலை)

மாவிட்டபுரத்திலே எதிரி களுடன் தீரமுடன் போராடி கடந்த செவ் வா ய ன் று வீரமரண ம டை ந் த லெப் டினன்ட் சுஜியின் (ஜீவா, பரப்புக்கடந்தான்) பூதவுடல் நேற்று அரியாலை பாரதி வீதியிலுள்ள அவரது உற வினர் இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட் டிருந்தது. அரியாலைப் பிர தேச மக்கள் பெருந்திரளாக வந்து வீரனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். பின் மதியம் ஒரு மணியளவில் இவரின் பூதவுடல் தாங்கிய பேழை ஊர்வலமாக கனக ரத்தினம் மத்திய மகா வித்தி யாலயத்திற்கு எடுத்துச் செல் லப்பட்டு அங்கு அஞ்சலிக் கூட் டம் நடைபெற்றது. ஏராள மான மாணவர்கள் இக்கூட் டத்திற்குச் சமுகம் அளித்திருந் தார்கள். அஞ்சலிக் கூட்டம் முடிவுற்றதும் அலங்கரிக்கப் பட்ட ஊர்தியில் பூதவுடல் மாவீரர் மயானத்திற்கு தக னத்திற்காக எடுத்துச் செல்லப் பட்டது. இவரின் பூதவுடலை முத்திரைச் சந்தை வரை மக் கள் ஊர்வலமாக எடுத்து வந்து வழியனுப்பி வைத்தார் கள். (11)

## போதிய வசதியின்றி நோயாளிகள் அவலம்

(மாங்குளம்)

கிளிநொச்சி அரசினர் வைத் தியசாலையில் நோ யா ளி க ளுக்குப் போ தி ய வசதிகள் இல்லாததால் நோயாளிகள் அவலமடைகின்றனர்.

அரசினர் வைத்தியசாலை மீண்டும் இயங்க ஆரம்பிப் பதையடுத்து நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்ற னர்.

இவ் வை த் தி ய சாலையில் நோயாளிகளுக்கு ம ரு ந் து த் தட்டுப்பாடு, டாக்டர் தட்டுப பாடு, குடிதண்ணீர், உணவு வழங்கலும் கிடையாததால் நோயாளிகள் பெரிதும் அவல மடைகின்றனர். (82)

## பொது அறிவுப்போட்டி

(அரியாலை)

மாவீரர் தினத்தையொட்டி அரியாலைப் பிரதேசத்திற்குள் அ ட ங் கி ய வர் க ளு க் கா ன பொது அறிவுப் போட்டி ஒன்றை நடாத்த அரியாலை மு த லு த வி நிலையத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். தமி ழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் 73 ஆம் ஆண்டு முதல் 90 ஆம் ஆண்டு வரை யிலான போராட்ட நிகழ்வு களை உள்ளடக்கியதாக மேற் படி போட்டி நடைபெறும். இப்பொது அறிவுப் போட்டி சிறியோர், பெரியோர்களுக் காக இரு பிரிவுகளாக நடை பெறவுள்ளது. (11)

# "நாங்களும் புலிகளே"

(மன்னார்)

மன்னார் மாவட்ட த் தி ல் பல பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவினரின் ''நாங்க ளு ம் புலி களே'' என்ற தெ ரு க் கூ த் து நாடகம் தற்போது நடாத் தப் பட்டு வருகின்றது.

கடந்த சில நாட் க ளா க மக்கள் இராணுவ கெடுபிடி களினாலும், இயற்கையின் சீற்றத்தினாலும் பாதிப்புற்றி ருந்த போதிலும் பெ ரு ந் தொகையான ம க் க ள் இத் தெருக்கூத்தை காண்பதற்குத் திரண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

விடுதலைப் புலிகளின் கிளி நொச்சி மா வ ட் ட கலை கலாசாரப் பிரி வி ன ரி ன் இந்த தெருக்கூத்து நிகழ்ச்சி மு ரு ங் க ன், மடு, உயிலங் கு ள ம் சூரியக ட் டை க்காடு, நானாட்டான், சின்ன பண்டிவிரிச் சா ன் பெ ரிய பண்டிவிரிச்சான், போ ன் ற பல பகுதிகளில் நடா த் த ப் பட்டுள்ளது. போர்க்கா ல த் தில் மக்களின் கடமை பற்றி இத் தெருக் கூத்து நா ட க த் தில் தெளிவாக எடுத்துக்காட் டப்பட்டுள்ளது. (மு)

## ஒப்பந்தக்காரர் சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்க ளத்திற்குத் தளபாடங்கள் செய்து வழங்கக் கூறுவிலை சமர்ப்பித்து வேலை வழங் கப்பட்ட அனைத்து ஒப்பந் தக்காரரும் நாளை சனிக் கிழமை (10. 11. 90)காலை 10. 00 மணிக்கு கோண்டா வில் ஸ்ரீராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் சமுகமளிக் குமாறு வடமாகாண அர சாங்க ஒப்பந்தக்காரர் சங்கம் கேட்டுள்ளது.


## அறிவித்தல்

மட்டக்களப்பு பாடுமீன் கலைமன்றத்தால் வெளியிடப்பட்ட ''அன்னை பூபதி வரலாற்று மலர்'' விற்பனைக்கு கொண்டு சென்ற சிலரால் உரிய விலையாகிய ரூபா பத்துக்கு மேல் விற் கப்பட்டதாகக் க ண் டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அன்பர்கள் ரூபா பத்துக்கு மேல் கொடுத்து வாங்கவேண்டாம் என மட்டக்களப்பு பாடுமீன் கலைமன்றத் தலைவர் அ. அசிர்த ராஜ் தெரிவிக்கிறார். (R-819)


## 3ஆம் ஆண்டு உள்ளக்குமுறல்



வீரவேங்கை

**செல்வநாயகம் பஞ்சரத்தினம்**

(பஞ்சர்)

| | |
|---|---|
| தமிழுக்காக தரணியில் வந்தது | தமிழுக்காக தன்னுயிர் ஈந்தது |
| 10–05–1968 | 09–11–1987 |

ஆவிபோய் எங்கள் ராஜன் ஆண்டும் மூன்றானதையோ
காவியே சுமந்து உன்னைக் காவடி எடுத்த கையால்
பாவியேம் உண்பதெல்லாம் பாற்கடல் நஞ்சேயப்பா
கூவியே அழைக்கும் எம்மை கூட்டியே நீயும்செல்வாய்!

ஈழத்தமிழ் மண்ணுக்கு உரமாகிவிட்ட உன் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும் பெற்றோர், உறவினர், நண்பர்கள்.

சிவகுல வீதி,
உரும்பராய்.
09. 11. 1990

(R-817)

## சிந்தனைக்கு

என்னை முன் நில்லன் மின் தெவ்விர் பலர் என்னை முன் நின்று கல் நின்றவர்.

— திருவள்ளுவர்


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 09-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# பல தடவை கேட்ட சவால்

'இன்னும் மூன்று மாதங்களில் நாட்டில் அமைதி ஏற்பட்டுவிடும்' என்பது சிறிலங்காவின் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணாவின் ஆரூடம் ஆகும்.

பிரச்சினைகளின் தீர்விற்கும் 'அமைதி நிலை' திரும்புவதற்கும் காலக்கெடு விதித்ததில் சிறிலங்காவின் அமைச்சர் ரஞ்சன் முதன்மையானவர் அல்ல. அவருக்கு முன்னரே சிறிலங்கா ஜனாதிபதிகள், அமைச்சர்கள், இராணுவத் தளபதிகள் இவ்வாறு பலர் காலக்கெடு விதித்துத் தோல்வி கண்டுள்ளனர்.

அமைச்சர் ரஞ்சன் இவ்வாறு காலக்கெடு விதித்துள்ள வேளையில், இலங்கையில் அமைதியின்மை மேலும் நீடிப்பதற்கும், வளர்ச்சி அடைவதற்குமான சூழ்நிலை காணப்படுகின்றதே ஒழிய அமைதி ஏற்படுவதற்கான எந்த வழிகளும் தெரிவதாகத் தெரியவில்லை.

1977 இல் இருந்து தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் கூர்மையடையத் தொடங்கிய போது அதற்கு அரசியல் தீர்வு காணாமல் இன அழிப்பின் மூலம் இராணுவத்தீர்வு காணமுற்பட்டதன் விளைவே இலங்கையில் அமைதியின்மை தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது. இந்த அரசியற் பிரச்சினையை அமைதி வழியால் தீர்ப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இராணுவத் தீர்வை நாடி பிரச்சினையைச் சிக்கலாக்கியதோடு அமைதி இன்மையையும், மக்களுக்குப் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியது. அதன் விளைவு இன்று தமிழ்ப் பிரதேசங்களில் தனது கட்டுப்பாட்டை இழந்து நிற்கின்றது.

இந்தநிலையில், ஒரு சில நகர்களைப் பிடித்தல், அல்லது அழித்தல் மூலம் நாட்டில் அமைதியை ஏற்படுத்திவிடலாம் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் கருதுகின்றார் போல் தெரிகின்றது. ஆனால் நகர்களைப் பிடித்தல், அல்லது அழித்தல் மூலம் அமைதியை ஏற்படுத்திவிடலாம் என அமைச்சர் ரஞ்சன் எண்ணுவாரானால் அது அவரது சிறுபிள்ளைத் தனத்தையே காட்டும்.

மேலும் இன்று இலங்கையில் வடக்குக் கிழக்கில் மட்டும் அமைதியின்மை நிலவவில்லை. இலங்கை பூராவுமே அமைதியின்மை நிலவுகின்றது. இராணுவத்தினரினதும் கொலைகாரக்கும்பல்களினதும் துணைகொண்டு ஜே.வி.பி தலைவர் ரோகண விஜயவீரா, உபதலைவர் உபதிஸ கமநாயக்கா உட்பட அறுபத்தையாயிரத்துக்கும் மேற்பட்டோரைப் படுகொலை செய்தமையால் தெற்கில் அமைதி ஏற்பட்டுவிட்டதாக இல்லை. அண்மைக் காலத்தில் தெற்கில் நடைபெறும் சம்பவங்கள் நாங்கள் இன்னும் அழியவில்லை என ஜே. வி. பியினர் அரசாங்கத்திற்குக் காட்டுவது போல் தெரிகின்றது. அத்தோடு அரசாங்கத்தால் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களின் எழுச்சியும் அரசாங்கத்திற்கு நெருக்கடியைக் கொடுத்து வருகின்றது.

அத்தோடு இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் தமக்குச் சாதகமாகஉருவாக்கிக் கொண்ட சக்திகளும் இன்று தொல்லை கொடுக்கும் சக்திகளாகமாறிவருவதாகவும்செய்திகள்தெரிவிக்கின்றன. அதாவது பஞ்சாப்பில் மிதவாதிகளை அடக்க தீவிரவாதிகளுக்கு (பிந்திரன் வாலே குழுவினருக்கு) மறைந்த இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி ஊக்கமும் ஆதரவும் கொடுத்து பின்னர் தொல்லை அனுபவித்தது போன்றும் அஸாம் மாநில அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்க போடோக் களுக்கு ராஜீவ் காந்தியின் மத்திய அரசாங்கம் ஆயுதம் வழங்கிப் பின்னர் தொல்லைகளை அனுபவித்தது போன்றும் சிறிலங்கா அரசாங்கம் முஸ்லிம்களுக்கு வழங்கிய ஆயுதங்களால் தொல்லைகளை அனுபவிப்பதற்கான எச்சரிக்கைகளும் வரத் தொடங்கிவிட்டன.

இந்த நிலையில் சில இராணுவத்தளபாடங்களையும், விமானங்களையும், விசைப்படகுகளையும் வாங்குவதினாலும் இராணுவத்தினரின் தொகையை அதிகரிப்பதினாலும் அமைதியை ஏற்படுத்தலாம் என ரஞ்சன் எண்ணுவாரேயானால் அது அவரது அறியாமையையே காட்டும்.

வியட்நாமில் அமெரிக்க இராணுவத் தளபாடங்களினாலும், ஆப்கானிஸ்தானில் ரஷ்ய இராணுவத் தளபாடங்களினாலும் அமைதியை நிலைநாட்ட முடியாமல் போன வரலாற்றை இலங்கை வரலாற்றிலும் ஒருதடவை ரஞ்சன் காணவிளைகின்றார் போலும்.

# உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



தம்பலகாமத்தில் ஜோண் சில்வா என்றொருவன் இருக்கிறான். தமிழர் மத்தியிலேயே இவனும் இருந்து வந்திருக்கிறான். பட்டிமேட்டில் உள்ள பிள்ளையார் கோயில் காணியில்தான் இவனது வீடு இருந்தது இவனுக்கு இரண்டு பெண்களும் ஒரு ஆண்பிள்ளையும் உண்டு. இவனது மகனை 'றாலாமி' என அனைவரும் அழைப்பர். இவனது பெயர்விஜேதாஸ. என்ன காரணத்தினாலோ ஜே. வி. பி.யினர் றாலாமியைச் சுட்டு விட்டனர்.

தம்பலகாமத்தில் நிறைய மாடுகள், எருமைகள் உண்டு. இங்கு பாலை வாங்கி அதைக் கொழும்புக்கு அனுப்பி வியாபாரம் செய்வதுதான் ஜோண் சில்வாவின் தொழில். அதனால் இவன் பெரிய பணக்காரனாகி விட்டான். அத்துடன் தம்பலகாமம் கோணேசர் கோயிலுக்குச் சொந்தமான காணியில் விவசாயம் செய்துவந்தான். ஆரம்பத்தில் இவனுக்கு குத்தகைக்கு வயலைக் கொடுத்து வந்த கோணேசர் கோயில் நிர்வாகம் பின்னர் குத்தகையை ஏலத்தில் விட ஆரம்பித்தது. ஏலத்தில் இவனுக்கு நிலம் கிடைக்காமல் போயிற்று. பின்னர் தமிழர்களுக்குச்சொந்தமான காணியில் போய் அத்துமீறியிருந்தான். அத்துமீறி இருக்கும் இவனை வெளியேற்ற தமிழரான உதவி அரசாங்க அதிபர் முயற்சித்தார். இவனுக்கும் உதவி அரசாங்க அதிபருக்கும் பலப்பரீட்சை நிகழ்ந்தது. அன்றிலிருந்து தம்பலகாமத்துக்கு சிங்களவரே உதவி அரசாங்க அதிபராக இருக்கிறார். சட்டவிரோதமாகக் குடியேறிய சிங்களவனைக் காப்பாற்ற உதவி அரசாங்க அதிபர் பதவிக்குதொடர்ந்துசிங்களவரை அரசு நியமிக்கிறது என்றார்.

'தம்பலகாமம் கோயிலுக்கு எத்தனை ஏக்கர் வயல் உள்ளது?' என்று கேட்டேன். 'ஆயிரம் ஏக்கர் வரையில் இருக்கும்' என்றார். தொடர்ந்து 'தம்பலகாமம் கோயில் வீதியில் அரசமரம் ஒன்று நின்றது; தற்போது அது வெட்டப்பட்டு விட்டது. அரசமரம் அங்கே இருந்தபடியால் தம்பலகாமம் கோயிலுக்குச் சொந்தமான காணியின் அரைப்பங்கு சிங்களவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கூறி சிங்களவரை குடியேற்றும் முயற்சிகளில் ஜோண்சில்வா ஈடுபடுகிறான் என்றார். அது சாத்தியப்படக் கூடிய விஷயமா? என்று கேட்டேன். ''ஏன் இன்று 13ஆம் கட்டை,ஜெயந்திபுர எல்லாம் சிங்களவர் குடியேறவில்லையா? குடியேறிய பின் சிங்களப்பெயரை வைத்தால் அதன் பின் அது சிங்களக் கிராமம் தானே! அதுதானே இங்குள்ள நடைமுறை'' என்றார். அரசமரம் நின்ற இடமெல்லாம் சிங்கள இடமாம்; புதிய விளக்கம் (பின்னர்நான் சந்தித்த துரைநாயகம் என்பவரும் அரசமரத்தை வெட்டியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர். பாராளுமன்றத்தில் கூட சிறில் மத்யூ இந்தப் பிரச்சினையை எழுப்பியிருந்தார். திரு. துரைநாயகம் ஒரு கட்டத்தில் ''முளைக்கும் ஒவ்வொரு அரசமரத்தையும் வெட்டுவதன் மூலம் எதிர்காலத்தில் வெட்டுப்படவிருக்கும் தமிழரின்எண்ணிக்கையை வெட்டுகிறோம்'' என்று விளக்கம் கொடுத்தார்.)

**8**

''அதெப்படி''? என்று நான் கேட்டபோது 'அரசமரம் இருக்கும் இடமெல்லாம் புத்த விகாரை இருக்கவேண்டும். புத்தவிகாரையின் மணி ஓசை கேட்கும் இடமெல்லாம் சிங்களவருக்குச் சொந்தமான நிலம் என்று சிறில் மத்யூ ஒரு கட்டத்தில் கூறியிருந்தார். சிறில் மத்யூ ஊட்டிய இனவாத விதைதான் இன்று தானே முளைக்கும் அரசமரத்தைச் சுற்றியுள்ள இடமெல்லாம் சிங்களவருக்குச் சொந்தமான இடமென்று வாதிட வைக்கிறது' என்று விளக்கம் கொடுத்தார்.

> அரசமரம் இருக்கும் இடமெல்லாம் புத்த விகாரை இருக்க வேண்டும். புத்த விகாரையின் மணி ஓசை கேட்கும் இடமெல்லாம் சிங்களவருக்குச் சொந்தமான இடம்.
>
> - சிறில்மத்யூ

சிங்கள ஊர்காவல்படையினரைத் தூண்டி விடுவது ஜோண்சில்வாதான் என்றார். சிங்கள ஊர்காவல் படையால் இந்தமுறையும் தொந்தரவு உண்டா? என்று கேட்டோம் - தற்சமயம் மிகப்பிரச்சினையானவர்கள் முஸ்லிம் ஊர்காவல்படையினர் - முன்னர்சிங்களஇராணுவம்,சிங்கள ஊர்காவல்படை என்றிருந்து பின்னர் இந்திய இராணுவம் என்றிருந்து தற்பொழுது முஸ்லிம் ஊர்காவல்படை தமிழர் அழிப்பை பொறுப்பேற்றிருக்கிறது. எப்போதும் தமிழர்களுக்கு அழிவைத்தான் ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். தமிழின அழிப்பில் நடிகர்கள்தான் மாறியிருக்கிறார்களேயொழிய பாத்திரங்கள் மாறவில்லை என்றார் விரக்தியுடன்.

இந்திய இராணுவம் அப்படியென்ன வித்தியாசமாகச் செய்தது? எல்லா இடமும் தமிழரைச் சுட்டது போல இங்கேயும் சுட்டிருக்கும்!' என்றேன். தம்பலகாமம் கள்ளிமேட்டைச் சேர்ந்த நவரட்ணம் என்பவரை உடம்பில் துணியால் சுற்றி ரின்னர் ஊற்றித் தீமூட்டியது. இப்படி வேறெங்காவது செய்துள்ளதா? என்று சினத்துடன் கேட்டார். கோவிக்க வேண்டாம். இதையொத்த சம்பவங்கள் பலதைச் செய்துள்ளது தான். ரின்னர் ஊற்றிக் கொளுத்தியதுநான்இப்போது தான் அறிகிறேன். சரி நீங்கள் ஜோண்சில்வாவைப் பற்றிக் கூறுங்கள் என்றேன்.

'ஜோண்சில்வாவினால் ஊக்குவிக்கப்படும் சிங்கள ஊர்காவல்படை போன கலவரத்தில் புதுக்குடியிருப்பில் மட்டும் முப்பத்துமூன்று பேரைக் கொன்றது என்றார். கொஞ்சம் விளக்கமாகக்கூறுங்கள் என்றேன். போன கலவரத்தில் கோயிலடியில் அகதிகளாக இருந்தவர்களிடம் இராணுவம் வந்து நீங்கள் பழைய தொழில்களைச் செய்யலாம். இனிப் பிரச்சினையில்லை என்றனர். அதை நம்பி, புதுக்குடியிருப்பில் உள்ள அரிசிமில் ஒன்றுக்கு வேலைக்குப் போன தமிழர்கள் 33 பேரை ஊர்காவல் படை கடத்திக்கொண்டு போய்ச் சுட்டது; அது மட்டுமல்ல பாரிச வாதத்தினால் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருந்த மில் உரிமையாளர் சபாரட்ணத்தின் கைவிரலில் மோதிரம் இருப்பதைக்கண்டு விரலையும் வெட்டிக் கொண்டு போனது என்றார்.

இம்முறையும் இப்படி ஏதும் திட்டமிருக்குமா? என்று கேட்டேன். பட்டிமேட்டில் உள்ள ஸ்ரீ சாரதா வித்தியாலயத்துக்கு வந்து அகதிப்பிள்ளைகளைப் படிக்கச் சொல்கிறார்கள். அது இராணுவமுகாமுக்குக் கொஞ்சம் தொலைவிலுள்ளது. படிக்கப் போகும் பிள்ளைகளை அப்படியே அள்ளிக்கொண்டு போகும் திட்டமிருக்கும் என்பதால் பிள்ளைகள் படிக்கப் போகவில்லை என்றார். ஏன் இராணுவ முகாமிலேயே பிடிக்கிறார்கள் தானே என்று கேட்டேன். இராணுவ முகாம் பக்கத்தில் உள்ள இடத்தில் என்றால் தாங்கள் மறுமொழி சொல்ல வேண்டியிருக்கும்; கொஞ்சம் தள்ளியென்றால் தங்களுக்கு இதைப்பற்றித் தெரியாது, ஊர்காவல்படை தான் கொண்டு போயிருக்கலாம் என்று இராணுவத்தினர் தப்பிக்கப்பார்ப்பார்கள். இப்படித்தானே போன கலவரத்தில் மில்லில் இருந்து கொண்டு போய் முப்பத்துமூன்று பேரைக் கொன்றவர்கள் என்றார். தமிழின அழிப்பில் தான் எத்தனை வகை என்று எண்ணிக் கொண்டேன்.

அகதிமுகாம்களில் நடக்கும் விடயங்கள் பற்றி இதற்கு முடிவு காண சுயமாக ஏதாவது செய்தார்களா? என்று கேட்டேன். இதற்கு என்ன செய்ய முடியும். பொறுப்பான செஞ்சிலுவைச் சங்கம் போன்றவையே கைவிரிக்கும் போது என்றார். (தொடரும்)

# முக்கிய அரச அலுவலகங்கள் இடம் மாற்றப்படவுள்ளன

(மாங்குளம்)

முல்லைத்தீவில் மக்கள் நலன் கருதி சில முக்கிய அலுவலகங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் மாற்றப் படவுள்ளன.

முல்லைத்தீவில் சிக்கியிருக்கும் மிருக வைத்தியர் அலுவலகமும், விவசாயத் திணைக்களமும் மாங்குளத்தில்தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகமும்பாண்டியன்குளம் துணுக்காய் உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளுக்கு இடம் மாறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை முல்லைத்தீவுஅரசாங்கஅதிபர் திரு.கே.பொன்னம்பலம் மேற்கொண்டுள்ளார்.

மாங்குளம் தபாலகம் ஏற்கனவே ஒலுமடுவுக்கு இடம் மாற்றப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (82)

# சந்திரசேகர் குழுவினருக்கு ராஜீவ் நிபந்தனையற்ற ஆதரவு

(டில்லி)

வி. பி. சிங் தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து நேற்று இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியை ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் ஆட்சி அமைக்கும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் ராஜீவ் காந்தி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதேவேளை ஜனதாதளத்தில் இருந்து பிரிந்து சென்ற சந்திரசேகர் தலைமையிலான குழுவினருக்கு தாம்நிபந்தனையற்ற ஆதரவை வழங்கப் போவதாக, பத்திரிகையாளர்களுக்கு ராஜீவ் காந்தி தெரிவித்தார். இம்முடிவை இந்திரா காங்கிரஸ் கட்சி பாராளுமன்றக்குழுவும் ஊர்ஜிதம் செய்தது. அதேவேளை சந்திரசேகர்குழுவினருக்குக் கொடுக்கும் ஆதரவு எதற்கும் நிபந்தனை விதிக்கவில்லை எனவும் இந்திரா காங்கிரஸ் பாராளுமன்றக்குழு தெரிவித்துள்ளது.

## ஆட்சி அமைக்க ஜனாதிபதி சந்திரசேகரை அழைக்கக்கூடாது

- வி. பி. சிங்

(டில்லி)

நேற்று முன்தினம் நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி அடைந்த வி. பி. சிங்கை அடுத்த அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை பிரதம மந்திரியாக இருக்கும்படி ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் கேட்டுள்ளார்.

அதேவேளைநேற்றுக்காலை ஜனாதிபதியைச் சந்தித்த வி. பி. சிங் சந்திரசேகர் குழுவினரை ஆட்சி அமைக்க அழைக்கக் கூடாது என ஜனாதிபதியைக் கேட்டுள்ளார். அத்தோடு இடதுசாரிக் கட்சிகளும் இதே கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் விடுத்துள்ளன.

## வி. பி. சிங்கின் தோல்வி நாட்டிற்குப் பேரிழப்பு

- கருணாநிதி

(சென்னை)

வி. பி சிங்கின் இராஜினாமாத் தொடர்பாக தமிழக முதல்வர் மு. கருணாநிதி கருத்துத் தெரிவிக்கையில் மண்டல் ஆணைக்குழு பரிந்துரைகள் அமுலாக்கம், சமயச் சார்பின்மை ஆகியவற்றினால்த்தான் வி பி. சிங் தோற்க நேரிட்டது: இது நாடு முழுவதுக்கும் இழபு என்றார்.

ஜனதா தளத்திலிருந்து பிரிந்துபோன குழுவிற்கு அரசாங்கம் அமைக்க மக்களின் அங்கீகாரம் கிடையாது என்று கேரள முதலமைச்சர் நாயர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்காளத்தில் ஆட்சியிலிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் வி. பி. சிங்கிற்கு ஆதரவளித்து கருத்துத் தெரிவித்துள்ளன.

இதேவேளை கட்சி மாறல் தடுப்புச் சட்டத்தின்கீழ் கட்சி மாறியவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட உள்ளதாம். இதற்கு ஒருமாத காலமாகலாம்.

## ஆட்சி அமைக்கும் முயற்சியில் சந்திரசேகர் குழு தீவிரம்

(டிலலி)

ஜனதா தளத்தில் இருந்து பிரிந்து சென்ற சந்திரசேகர் தலைமையிலான குழுவினர் தற்பொழுது அரசமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக அவர்கள் பாரதிய ஜனதாக்கட்சி, அ. தி. மு. க. கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்

அதேவேளை நேற்று பத்திரிகையாளரைச் சந்திரசேகர் சந்தித்தபோது, ஒரு பத்திரிகையாளர் உங்கள் அரசாங்கம் எவ்வளவு காலம் நீடிக்கும் என கேட்டதற்கு சந்திரசேகர் ''அது தலைவரின் நம்பகத் தன்மையையும், கிடைக்கும் ஒத்துழைப்பையும் பொறுத்தது'' என்றார்.

அத்தோடு தனக்கு 280 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுண்டு எனவும் சந்திரசேகர் தெரிவித்தார்.

## முத்திரை தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

கடந்த மூன்று மாதங்களாக பண்டத்தரிப்பு அஞ்சல் அலுவலகத்தில் முத்திரைகளும், வான்கடிதங்களும் கையிருப்பில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்கள் பலரும் தனியார் கடைகளில் மிகக் கூடுதலான விலைக்கு இவற்றைப் பெறவேண்டியுள்ளது. (ச)

## 4 ஆம் கட்ட நிவாரணத்தில் குறைவு ஏற்படலாம்

(யாழ்ப்பாணம்)

இம்முறை வரும் கப்பலில் குறைந்தளவு உணவுப் பொருள்களே வரும் என எதிர்பார்க்கப்படுவதால் 4 ஆம் கட்டமாக வழங்கப்பட இருக்கும் உலர் உணவு நிவாரணத்தில் சில அத்தியாவசிய பொருள்களின் அளவு குறிப்பிட்ட அளவு குறைக்கப்பட இருப்பதாக தெரிகிறது.

முன்பு வழங்கப்பட்டு வந்த நிவாரணத்தில் ஒரு அங்கத்தவருக்கு ஒரு குடும்பத்தில் இரண்டு கிலோ அரிசி வழங்கப்பட்டு வந்தது. இது மேலும் குறைக்கப்படலாம் என்றும் அவ்வாறே ஏனைய சில அத்தியாவசிய பொருள்களும் குறைக்கப்படலாம் எனவும் தெரிகிறது. (லோ)

## ஊர்காவற்றுறையில் மோதல்

(காரைநகர்)

நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய இடங்களில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் தமது முகாம்கலைள விட்டு வெளியேற முற்பட்டபோது விடுதலைப்புலிளுக்கும், இவர்களுக்குமிடையில் கடும் மோதல் இடம் பெற்றது. முப்பது நிமிடங்கள்வரை நீடித்த இத்தாக்குதலைத் தொடர்ந்து இராணுவம் முகாமுக்குள் முடங்கியது. இத்தாக்குதலினால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றித் தெரியவில்லை. (ச)

## சிறுதொகைப் பணம் வரவுள்ளது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறைக்கு அடுத்து உணவுப் பொருள்களைக் கொண்டுவரவிருக்கும் விங்கோ ரேடர் கப்பலில் குறிப்பிட்ட ஒரு தொகைப் பணம் வரவுள்ளது.

இருந்தும் தாம் கேட்டுக்கொண்ட குறிப்பிட்ட தொகைப் பணத்திலும் மிகவும் குறைந்த ஒருதொகையே அனுமதிக்கப்பட்டுள்ளது என யாழ். செயலக அதிகாரிஒருவர் தெரிவித்தார். (லோ

## நோயாளர் உதவிப் பணம் இன்று விநியோகம்

(பண்டத்தரிப்பு)

வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள அரசாங்க உதவி பெறும் காசநோய், புற்று நோயாளர்களுக்கான ஆனி, ஆடி மாத உதவிப்பணங்கள் இன்று (நவம்பர் 09 வெள்ளிக்கிழமை) சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கொடுக்கப்படுகின்றன.

இவ்வுதவிப்பணம் பெறுபவர்கள் அனைவரையும் தவறாது வந்து பெற்றுக் கொள்ளுமாறு உதவி அரச அதிபர் திரு ஜி. என். சேகரம் தெரிவிககின்றார்.

இவர்களுக்காக ரூபா 25100 இவ்வுதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. (12)

## சுடுநீரால் சிறுவன் காயம்

(மானிப்பாய்)

சுடுதண்ணீர்ப் பாத்திரத்துடன் தனது சுட்டித்தனத்தைக் காட்டிய சிறுவன் மேல் முழுவதும் சுடுதண்ணீரை ஊற்றிக் கொண்டான்.

ஏழாலையைச் சேர்ந்த நா. ஐங்கரன் என்ற நான்குவயதே நிரம்பிய சிறுவன் தாயார் ஊற்றிவைத்த சுடுதண்ணீர்ப் பாத்திரத்தை எடுக்க முயன்றபோது அது அவனது உடல் முழுவதும் ஊற்றப்பட்டதால் பெரும் தொப்புளங்களுக்கு உள்ளான நிலையில் அவசர அவசரமாக நேற்று மானிப்பாயிலியங்கும் போதனாவைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (லோ)

---

**வைத்தியசாலை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல் 12-00 மணிமுதல் 1·00 மணிவரையும், மாலை 5-00 மணிமுதல் 6-00 மணிவரையுமே நோயாளிகளைப் பார்வையிடலாம். எல்லாச் சிகிச்சைகளுக்குரிய அனுமதிகள் யாவும் வெளிநோயாளர் பகுதியின் ஊடாகவே நடைபெறும்.

வைத்தியசாலைக்கு வரும் சகல வாகனங்களும் வெளி நோயாளர் பிரிவின் மேற்குப் புறப்பகுதியில் நிறுத்தப்படவேண்டும்,

இந்த ஒழுங்கு விதிகள் வைத்தியசாலையின் தூய்மையைப் பேணுவதற்காகவே கொண்டுவரப்பட்டதாக செஞ்சிலுவை அதிகாரிகள் கூறினார்கள். (க)

---

**யாழ். போதனா**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற வேறும் சில மருந்து வகைகள் போதிய அளவிலும் இல்லை. மொத்தத்தில் சுமார் ஒருவாரத்திற்கு போதுமான அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மட்டுமே கையிருப்பில் உள்ளன.

இதேவேளை வைத்தியசாலையின் புனரமைப்பு வேலைகள் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தன. வைத்திய உபகரணங்கள் பெரும்பாலானவை இன்னமும் பழுதுபார்க்கப்படாத நிலையில் அனாதரவாக அங்கும் இங்கும் சிதறிக்கிடப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இந்த நிலையில் வைத்தியசாலையைப் பொறுப்பேற்றிருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தமது வைத்தியசாலை அலுவலகப் பிரிவின் பாவனைக்காக வைத்தியசாலையின் பின்புறம் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் முப்பத்தைந்து அறைகளை சுமார் ஐம்பதுபேர் தங்கக்கூடிய வசதிகளுடன் மூன்று மாதங்களுக்கு வாடகைக்கு பெற்றுக் கொண்டு இன்றுமுதல் அங்கே தங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (க)

---

**அகதிகளை**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வைத்தார். அதேபோல அந்த அகதிளும் உதவி அரசாங்க அதிபரிடம் போய் அலுவலகத்தில் கேட்டனர். உதவி அரசாங்க அதிபரும் வேறு அதிகாரிகளைக் காட்டிவிட்டு தப்பிக்கொண்டபோதிலும் அதேதினம்மாலையில் ஏனைய சில அதிகாரிகளின் சிபார்சின் பேரில், அலுவலகம் பூட்டியிருந்த காரணத்தால் மீண்டும் அதே உதவி அரசாங்க அதிபரை அவருடைய வீடுதேடிச் சென்று தமது நிலையை எடுத்துக் கூறியபோது அந்த அதிகாரி ''இங்கிலீசில்'' பேசி தம்மை துரத்தி விட்டதாக நேற்று எம்மிடம் அவர்கள் வந்து முறையிட்டு தமக்கு நடந்ததியை எடுத்துக் கூறினர். (லோ)

---

**தெல்லிப்பளை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளில் அப்பகுதிகளை நோக்கி விரைந்து வந்த சிறிலங்கா விமானப்படையின் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் ஐந்துக்கும் மேற்பட்ட குண்டுகளை அப்பகுதிகளில் போட்டது இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் தெரியவில்லை. (ச,

---

**பல்கலைக்கழக**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் யாழ். அரச அதிபர் யாழ். மாவட்டத்தில் இல்லாத நிலையில் யாழ். செயலக நிர்வாகத்திற்கும் ஏனைய பொறுப்பானநிறைவேற்றுகைகளுக்கும் பொறுப்பாக இருக்கும் மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இந்த உலர் உணவுக்கொடுப்பனவை வேறு அரசசார்பற்ற பொது நிறுவனங்களின் உதவியுடன் இந்த மாணவர்களுக்கு வழங்குவதற்கும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானிக்கலாம் என்று கூறினார். (லோ)

---

**எழுச்சி யாத்திரை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதி பதினொரு மணியளவில் தேவரையாளி இந்துக்கல்லூரியில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இம்மாதம் இருபதாம் திகதி வரை தொடரும் இந்த ''எழுச்சி யாத்திரை'' மக்கள் வரவேற்பைப் பெற்று மிகச் சிறப்பாக நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. (மு)

---

**மனித உரிமை**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அக்கறை கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

இந்தக் குழுவினர் சிறிலங்கா அரசிற்கெதிராக வைத்திருக்கும் தப்பெண்ணத்தையே இந்த அறிக்கை காட்டுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

---

**மாவிட்டபுரத்தில்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறைப் பக்கமாக முன்னேற முற்பட்டபோது விடுதலைப்புலிகள் முன்னேற விடாது எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்,

இத்தாக்குதலால் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டனர். (மு)

---

**மீனவர் மீது**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் சரமாரியாகத் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் மீனவர்கள் பலர் கொல்லப்பட்டனர். நேற்றையதினம் இம் மீனவர்களில் ஒருவரது சடலம் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் கரை ஒதுங்கியுள்ளது. (மு)

---

**கடற்படை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குதிரை மலைக்கடலில் உள்ள புத்தளம் முள்ளிக்குளம் கடற்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டுபடகுகளில் வந்து கொண்டிருந்தபோது கரையில் இருந்து 500 யார் தூரத்தில் வைத்து இரண்டாவதாக வந்த படகு மீது புலிகளால் ஆர். பி ஜி. தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலால் அப்படகு பலத்த சேதத்திற்குள்ளாகியதுடன் அப்படகில் வந்த இராணுவத்தினர்பலர் கொல்யப்பட்டும் படுகாயமடைத்துமுள்ளனர்.

இதைத் தொடர்ந்து முதலாவது படகில் வந்த இராணுவத்தினர் சேதமுற்ற இப்படகைக் கட்டியிழுக்க முனைந்தபோது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். அப்போது ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை

பின் மூன்று படகுகளில் வந்த இராணுவத்தினர் தாக்குதலுக்குள்ளான படகுகளை இழுத்துச் சென்றனர். (மு)

---

**தாளையடியில்**

சியாகப் பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலால் பெரும் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (மு)

---

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் தர்மலிங்கம்

ஆனைப்பந்தியடியைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் தர்மலிங்கம் (08 - 11 - 90) நேற்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பு தர்மலிங்கம் (வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியும், அருளானந்தம் (தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு) திருமதி புனிதவதி, துரைராசா, கேதீஸ்வரன் (தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற வடிவேற்கரசு ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி அ. புஸ்பவதி. திருமதி கே. செல்வராணி, திருமதி வ. விஜினி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கல்வியங்காடு கலைமகள் வீதியில் (9-11-90) இன்று நடைபெற்று 2 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தயவுசெய்து இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கல்வியங்காடு. த. கேதீஸ்வரன் (மகன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31–ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.